Government Hospital at Chingleput.

* 604 *Q.*—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(*a*) whether it is a fact that the State Government have issued orders for opening additional Women and Children Wing in Government Hospital at Chingleput District; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) அண்டு (இ) செங்கற்பட்டு மருத்துவக் கல்லூரி மருத்துவ மனையில் 6 லட்ச ரூபாய் செலவில் 100 படுக்கைகள் கொண்ட தாய் சேய் மருத்துவப் பகுதி ஒன்றைக் கட்டுவதற்காக, அரசு அனுமதி வழங்கியுள்ளது.

திரு. என். டென்னிஸ் : எப்பொழுது கட்டடம் ஆரம்பிக்கப்படும் என்பதை அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : கட்டடம் கட்டுவதற்கான அனுமதியும் வழங்கப்பட்டுவிட்டது. அதற்கான இடமும் தேர்ந்தெடுக்கப்பட்டுவிட்டது. விரைவில் கட்டத் துவங்குவார்கள்.

கண் மருத்துவ முகாம்கள்.

* 605 வினு—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் நடமாடும் இலவசக் "கண் வைத்திய முகாம்களை" துவக்கும் செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : ஆம். மதுரை எர்ஸ்கின் மருத்துவமனை கண் சிகிச்சை பிரிவினுல் ஆண்டு ஒன்றுக்கு 24 இலவச கண் வைத்திய முகாம்களை செயல்படுத்த தேவையான ஆணையை அரசு பிறப்பித்துள்ளது.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : இலவச கண் சிகிச்சை முகாமை இதர மாவட்டங்களுக்கும் விரிவு படுத்த உத்தேசம் உண்டா?

1972 மார்ச் 21]

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : மதுரையில் உள்ள எர்க்ஸ்கின் மருத்துவ மனையில் உள்ள கண் மருத்துவ சிகிச்சைப் பிரிவினரால் இது நடத்தப்படுகிறது என்பதைத் தவிர, மதுரை மாவட்டத்தில் மட்டுமின்றி தமிழ் நாட்டின் பல்வேறு பகுதிகளில் அவர்களுடைய முகாமின் மூலம் கண் மருத்துவம் நடத்தி வருகிறார்கள்.

Damage to fishing boats.

* 606 Q.—DR. H. V. HANDE : Will the Hon. the Minister for Harijan Welfare be pleased to state—

(a) whether it is a fact that 10 mechanised fishing boats were destroyed and 3 damaged as a result of incendiary materials thrown on them by some local fishermen on 18th October 1971 at Kanyakumari; and

(b) if so, the details thereof and the action taken thereon to book the offenders?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : (அ) & (இ) 18—10—1971 அன்று அதிகாலையில் சில நாட்டுப்படகுகள், வீர பாண்டியன் பட்டிணத்திற்கு அருகில் நங்கூரம் போட்டு நிறுத்தி வைக்கப்பட்டிருந்த சில விசைப்படகுகளை அணுகி அவற்றிற்குத் தீ இட்டன. பன்னிரெண்டு விசைப்படகுகள் முற்றிலும் எரிந்து சாம்ப லாயின. மூன்று படகுகள் சேதமடைந்தன. மேற்சொன்ன இந்த நிகழ்ச்சி, திருநெல்வேலி மாவட்டம், திருச்செந்தூர் வட்டத்தைச் சேர்ந்த வீரபாண்டியன் பட்டிணத்திற்கு அருகில்தான் நடைபெற்றது. கன்னியாகுமரி மாவட்டத்தில் அல்ல. இந்த வழக்கைத் தனிக் காவலர் படைப்பிரிவு ஒன்று புலனாய்வு செய்து வருகிறது.

Notices for Urban Land Tax.

* 607 Q.—DR. H. V. HANDE : Will the Hon. the Minister for Food and Revenue be pleased to state—

(a) whether it is a fact that the Native Residents Association of Madras has urged the Government of Tamil Nadu during the last week of October, 1971 to serve demand notice for urban land tax in the same way as Corporation tax demands; and

(b) if so, the details thereof and the action taken thereon?